www.Padasalai.Net www.CBSEtips.in

லொயோலா

# ஈசி-சமூகஅறிவியல்

# 8

அரசு புதிய பாடத் திட்டத்தின்படி விடைக் குறிப்பு (Key) அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்.

## இலவசம்

## வரைபட பயிற்சி புத்தகம்

லொயோலா பப்ளிகேஷன்
விவேக் இல்லம்
19, ராஜ் நகர், N.G.O. 'A' காலனி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 7.
போன் : 0462 - 2553186, 2552405
செல் : 94433 81701, 94422 69810, 90474 74696

₹.270/-

Less Strain Score More

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# நூலாக்கம்

**Copy right : © LOYOLA PUBLICATION.**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

www.Padasalai.Net

Authors:

**Mr. R. Nallaiah Raj,** M.Com., M.A., M.Phil., B.Ed., PGDCA.,
P.L.W.A. Higher Secondary School, Vickramasingapuram,

**Mrs. Delsi**

Loyola Publications

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# பொருளடக்கம்


| அலகு | பாட தலைப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1 | ஐரோப்பியர்களின் வருகை | 5 |
| 2 | வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை | 12 |
| 3 | கிராம சமூகமும் வாழ்க்கை முறையும் | 20 |
| 4 | மக்களின் புரட்சி | 25 |
| 5 | இந்தியாவில் கல்வி வளர்ச்சி | 30 |
| 6 | இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி | 40 |
| 7 | ஆங்கிலேயர் ஆட்சியில் நகர்ப்புற மாற்றங்கள் | 48 |
| 8 | காலங்கள்தோறும் இந்தியப் பெண்களின் நிலை | 57 |
| | **புவியியல்** | |
| 1 | பாறை மற்றும் மண் | 65 |
| 2 | வானிலை மற்றும் காலநிலை | 73 |
| 3 | நீரியல் சுழற்சி | 80 |
| 4 | இடம் பெயர்தல் மற்றும் நகரமயமாதல் | 87 |
| 5 | இடர்கள் | 95 |
| 6 | தொழிலகங்கள் | 104 |
| 7 | கண்டங்களை ஆராய்தல் (ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா) | 111 |
| 8 | புவிப்படங்களைக் கற்றறிதல் | 121 |


www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


| அலகு | பாட தலைப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| | **குடிமையியல்** | |
| 1 | மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது? | 128 |
| 2 | குடிமக்களும் குடியுரிமையும் | 134 |
| 3 | சமயச்சார்பின்மையைப் புரிந்துகொள்ளுதல் | 139 |
| 4 | மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும் | 147 |
| 5 | சாலை பாதுகாப்பு விதிகள் மற்றும் நெறிமுறைகள் | 156 |
| 6 | பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை | 167 |
| 7 | நீதித்துறை | 174 |
| | **பொருளியல்** | |
| 1 | பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள் | 182 |
| 2 | பொது மற்றும் தனியார் துறைகள் | 190 |
| | அரசு பொதுத் தேர்வு - மே 2022 | 198 |


www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

வரலாறு
அலகு - 1

# ஐரோப்பியர்களின் வருகை

## பகுதி I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. **இந்தியாவில் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார்?**
அ) வாஸ்கோடகாமா ஆ) பார்த்தலோமியோ டயஸ்
இ) அல்போன்சோ - டி - அல்புகர்க் ஈ) அல்மெய்டா **விடை: இ) அல்போன்சோ - டி - அல்புகர்க்**

2. **பின்வரும் ஐரோப்பிய நாடுகளுள் இந்தியாவுக்கு கடல்வழியைக் கண்டுபிடிப்பதில் முதன்மையாக இருந்த நாடு எது?**
அ) நெதர்லாந்து (டச்சு) ஆ) போர்ச்சுகல்
இ) பிரான்ஸ் ஈ) பிரிட்டன் **விடை: ஆ) போர்ச்சுகல்**

3. **1453 ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டிநோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?**
அ) பிரான்ஸ் ஆ) துருக்கி இ) நெதர்லாந்து (டச்சு) ஈ) பிரிட்டன் **விடை: ஆ) துருக்கி**

4. **சர் வில்லியம் ஹாக்கின்ஸ் _______ நாட்டைச் சேர்ந்தவர்.**
அ) போர்ச்சுக்கல் ஆ) ஸ்பெயின் இ) இங்கிலாந்து ஈ) பிரான்ஸ் **விடை: இ) இங்கிலாந்து**

5. **இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை**
அ) வில்லியம் கோட்டை ஆ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை
இ) ஆக்ரா கோட்டை ஈ) டேவிட் கோட்டை **விடை: ஆ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை**

6. **பின்வரும் ஐரோப்பிய நாட்டினருள் வியாபாரத்திற்காக, இந்தியாவிற்கு வருகை தந்த கடைசி ஐரோப்பிய நாட்டினர்**
அ) ஆங்கிலேயர்கள் ஆ) பிரெஞ்சுக்காரர்கள்
இ) டேனியர்கள் ஈ) போர்ச்சுக்கீசியர்கள் **விடை: ஆ) பிரெஞ்சுக்காரர்கள்**

7. **தமிழ்நாடு கடற்கரையோரத்தில் உள்ள தரங்கம்பாடி _______வர்த்தக மையமாக இருந்தது.**
அ) போர்ச்சுக்கீசியர்கள் ஆ) ஆங்கிலேயர்கள்
இ) பிரெஞ்சுக்காரர்கள் ஈ) டேனியர்கள் **விடை: ஈ) டேனியர்கள்**

| II. கோடிட்ட இடங்களை நிரப்புக | விடைகள் |
|---|---|
| 1. இந்தியாவின் தேசிய ஆவணக்காப்பகம் (NAI) _______ல் அமைந்துள்ளது. | **புதுடெல்லி** |
| 2. போர்ச்சுக்கீசிய மாலுமியான பார்த்தலோமியோ டயஸ் ______ என்பவரால் ஆதரிக்கப்பட்டார். | **மன்னர் இரண்டாம் ஜான்** |
| 3. இந்தியாவில் அச்சு இயந்திரம் 1556ல் _______ அரசால் கோவாவில் நிறுவப்பட்டது. | **போர்ச்சுகீசிய அரசால்** |
| 4. முகலாயப் பேரரசர் ________ இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வர்த்தகம் செய்ய அனுமதி அளித்தார். | **ஜஹாங்கீர்** |
| 5. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் ________ என்பவரால் நிறுவப்பட்டது. | **கால்பர்ட்** |
| 6. ________ என்ற டென்மார்க் மன்னர், டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தை உருவாக்க ஒரு பட்டயத்தை வெளியிட்டார். | **நான்காம் கிரிஸ்டியன்** |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## III. பொருத்துக

| | வாணிப நிறுவனங்கள் | | வருடம் | | விடைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | டச்சுக்காரர்கள் | அ | 1664 | ஆ | 1602 |
| 2 | ஆங்கிலேயர்கள் | ஆ | 1602 | இ | 1600 |
| 3 | டேனியர்கள் | இ | 1600 | ஈ | 1616 |
| 4 | பிரெஞ்சுக்காரர்கள் | ஈ | 1616 | அ | 1664 |

## IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக,

1. சுயசரிதை, எழுதப்பட்ட ஆதாரங்களுள் ஒன்று ஆகும். **விடை : சரி**
2. நாணயங்கள் பயன்பாட்டு பொருள் ஆதாரங்களுள் ஒன்று ஆகும். **விடை : சரி**
3. ஆனந்தரங்கம், பிரிட்டிஷ் மொழிபெயர்ப்பாளராக இருந்தார். **விடை : தவறு**
4. வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடங்கள் ஆவணக் காப்பகங்கள் என்றழைக்கப்படுகிறது. **விடை : சரி**

## V. 1) பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை (✓) செய்க.

1. **1. கவர்னர் நினோ-டி-குன்கா போர்ச்சுக்கீசிய தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினார்.**
 **2. போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவிலிருந்து கடைசியாக வெளியேறினர்.**
 **3. டச்சுக்காரர்கள், சூரத்தில் தங்கள் முதல் வணிக மையத்தை நிறுவினர்.**
 **4. இங்கிலாந்தின் மன்னர் முதலாம் ஜேம்ஸ், ஜஹாங்கீர் அவைக்கு சர் தாமஸ் ரோவை அனுப்பினார்.**
 அ) 1 மற்றும் 2 சரி ஆ) 2 மற்றும் 4 சரி
 இ) 3 மட்டும் சரி ஈ) 1, 2 மற்றும் 4 சரி **விடை: ஈ) 1, 2 மற்றும் 4 சரி**

## V. 2) தவறான இணையைக் கண்டறிக.

1. அ) பிரான்சிஸ் டே - டென்மார்க்
 ஆ) பெட்ரோ காப்ரல் - போர்ச்சுகல்
 இ) கேப்டன் ஹாக்கின்ஸ் - இங்கிலாந்து
 ஈ) கால்பர்ட் - பிரான்ஸ் **விடை: அ) பிரான்சிஸ் டே - டென்மார்க்**

## VI. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி

**1. ஆவணக் காப்பகங்கள் பற்றி சிறுகுறிப்பு தருக**
- வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடம் ஆவணக் காப்பகம் என்று அழைக்கப்படுகிறது.
- இந்திய தேசிய ஆவணக்காப்பகம் (NAI) புதுதில்லியில் அமைந்துள்ளது.
- இது இந்திய அரசின் ஆவணங்களைப் பாதுகாக்கும் முதன்மைக் காப்பகமாகும்.
- கடந்த காலம் குறித்த பல்வேறு தகவல்களுடன் தற்கால மற்றும் எதிர்கால தலைமுறையினருக்கு ஒரு வழிகாட்டியாக இது விளங்குகிறது.

**2. நாணயங்களின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.**
- நாணயங்கள், நிர்வாக வரலாற்றை அறிய ஒரு நல்ல ஆதாரமாக திகழ்கின்றன
- நவீன இந்தியாவின் முதல் நாணயம் கி.பி.1862 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் ஆட்சியில் வெளியிடப்பட்டது.

**3. இளவரசர் ஹென்றி 'மாலுமி ஹென்றி' என ஏன் அழைக்கப்படுகிறார்?**
- போர்ச்சுக்கீசிய இளவரசர் ஹென்றி, உலகின் அறியப்படாத பகுதிகளை ஆராயவும், சாகச வாழ்க்கையை மேற்கொள்ளவும் தனது நாட்டு மக்களை ஊக்குவித்தார்.
- கடற்பயணம் மேற்கொள்வது குறித்து ஒரு தனிப் பயிற்சி பள்ளியையும் நிறுவினார்.
- எனவே இளவரசர் ஹென்றி பொதுவாக 'மாலுமி ஹென்றி' என அழைக்கப்படுகிறார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. இந்தியாவில் டச்சுக்காரர்களால் நிறுவப்பட்ட முக்கிய வர்த்தக மையங்களின் பெயரை எழுதுக.**

இந்தியாவில் பழவேற்காடு, சூரத், சின்சுரா, காசிம்பஜார், பாட்னா, நாகப்பட்டினம், பாலசோர் மற்றும் கொச்சின் முதலிய பகுதிகளே டச்சுக்காரர்களின் முக்கிய வர்த்தக மையங்களாகும்.

**5. இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக.**

சூரத், ஆக்ரா, அகமதாபாத், புரோச். சென்னை. பம்பாய், கல்கத்தா, மசூலிப்பட்டினம் மற்றும் சால்செட்

## VII. விரிவான விடையளி

**1. நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.**

**நவீன இந்திய ஆதாரங்கள்:**

- நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் நாட்டின் அரசியல், சமூக - பொருளாதார மற்றும் கலாச்சார முன்னேற்றங்களை பற்றி அறிய உதவுகின்றன.
- லிஸ்பன், கோவா, பாண்டிச்சேரி மற்றும் சென்னை ஆகிய இடங்களில் உள்ள ஆவணக் காப்பகங்கள் விலை மதிப்பற்ற வரலாற்று ஆதாரங்களின் பெட்டகமாகும்.

**எழுதப்பட்ட ஆதாரங்கள்:**

- இலக்கியங்கள், பயணக் குறிப்புகள், நாட்குறிப்புகள், சுயசரிதை, துண்டு பிரசுரங்கள், அரசாங்க ஆவணங்கள் மற்றும் கையெழுத்து பிரதிகள் முதலியவை எழுதப்பட்ட ஆதாரங்களாகும்.
- அச்சு இயந்திரம் மூலம் பல மொழிகளில் எண்ணற்ற புத்தகங்கள் வெளியிடப்பட்டன.
- குறிப்பாக ஆனந்தரங்கம் என்பவரின் நாட்குறிப்புகள் அரசியல் தீர்வுகளை வெளிப்படையாக விளக்கும் வரலாற்று ஆதாரமாகும்.
- எழுதப்பட்ட ஆதாரங்கள் மூலம் கலை, இலக்கியம், வரலாறு, அறிவியல் போன்ற துறைகளைப் பற்றி மக்கள் எளிதாக அறிய முடிகிறது.

**பயன்பாட்டு பொருள் ஆதாரங்கள்:**

- ஓவியங்கள், சிலைகள், வரலாற்று புகழ்மிக்க கட்டிடங்கள், நாணயங்கள் மற்றும் அருங்காட்சியகத்தில் உள்ள கலை, தொல்பொருட்கள் போன்றவை பயன்பாட்டு பொருள் ஆதாரங்களாகும்.
- குறிப்பாக ஓவியங்கள், சிலைகள் நவீன இந்திய வரலாற்றின் முதன்மை ஆதாரங்களாக உள்ளன.
- நாணயங்களும் நம் நிர்வாக வரலாற்றை அறிய உதவும் ஒரு நல்ல ஆதாரமாகும்.

**2. போர்ச்சுக்கீசியர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?**

**போர்ச்சுக்கல்:**

- ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும், போர்ச்சுக்கல் மட்டும் இந்தியாவிற்கு புதிய கடல் வழியைக் கண்டுபிடிப்பதில் மிகவும் ஆர்வமாக இருந்தது.
- கி.பி. 1498-ல் **வாஸ்கோடகாமா** முதன் முதலாக தென்னிந்தியாவின் கள்ளிக்கோட்டையை வந்தடைந்தார். மன்னர் சாமரின் அவரை வரவேற்றார்.
- இவர் 1501-ல் இரண்டாவது முறையாக இந்தியா வந்தபொழுது கண்ணனூரில் ஒரு வர்த்தக மையத்தை நிறுவினார்.
- இதன் பிறகு கள்ளிக்கோட்டை, கொச்சின் பகுதிகளிலும் வர்த்தக மையங்களை அவர் நிறுவினார்.
- கி.பி. 1505-ல் **பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா** இந்திய போர்ச்சுக்கீசிய பகுதிகளின் முதல் கவர்னரானார்.
- டையூவில் நடைபெற்ற கடற்போரில் அல்மெய்டா முஸ்லீம் கூட்டுப்படைகளைத் தோற்கடித்தார்.
- கி.பி. 1509-ல் கவர்னரான **அல்போன்சோ-டி-அல்புகர்க்** இந்தியாவில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை உண்மையில் நிறுவினார்.
- இவர் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கி.பி. 1510-ல் கோவாவைக் கைப்பற்றினார். மேலும் விஜயநகரப் பேரரசுடன் நட்புறவை மேற்கொண்டார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- கி.பி. 1529-ல் மூன்றாம் கவர்னரான **நினோ-டி-குன்ஹா** டையூ, டாமன் போன்ற பகுதிகளை கைப்பற்றினார்.
- இவ்வாறு போர்ச்சுக்கீசியர் 16ஆம் நூற்றாண்டில் கோவா, டையூ, டாமன், பசீன், சால்செட், பாம்பே மட்டுமின்றி பிற இந்திய கடற்கரை பகுதிகளையும் கைப்பற்றி வணிக ஆதாயத்திற்கு பயன்படுத்தினர்.

**3. ஆங்கிலேயர்கள், எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?**

- கி.பி 1608 ஆம் ஆண்டு வணிகத் தலம் அமைக்க ஜஹாங்கீர் அவைக்கு வந்த மாலுமி வில்லியம் ஹாக்கின்ஸ், போர்ச்சுகீசிய தலையீடுகளினால் அனுமதி கிடைக்காமல் இங்கிலாந்து திரும்பினார்.
- சூரத் அருகே ஆங்கிலத் தளபதி தாமஸ் பெஸ்ட், போர்ச்சகீசிய கடற்படையை தோற்கடித்தார்.
- இந்நிகழ்வில் மகிழ்ச்சியடைந்த ஜஹாங்கீர், 1613ல் சூரத்தில் ஆங்கில வணிக மையம் அமைக்க அனுமதித்தார்.
- 1615ம் ஆண்டு ஜஹாங்கீர் அவைக்கு வந்த சர்தாமஸ் ரோ மூன்று ஆண்டுகள் ஆக்ராவில் தங்கி, இறுதியில் ஜஹாங்கீர் அனுமதியுடன் ஆக்ரா, அகமதாபாத். புரோச் முதலிய இடங்களில் வணிக மையங்களை நிறுவினார்.
- குறிப்பாக ஆங்கிலேயர்கள் தங்களது முதல் வணிக மையத்தை வங்காள விரிகுடா கடற்கரையில் உள்ள மசூலிபட்டினத்தில் 1611ல் நிறுவினர்.
- 1639ல் பிரான்சிஸ்டே என்ற ஆங்கில வணிகர், சந்திரகிரி மன்னர் சென்னப்ப நாயக்கரிடமிருந்து மெட்ராசை குத்தகைக்கு பெற்றார். அங்கு தான் ஆங்கில கம்பெனி புனித ஜார்ஜ் கோட்டை என்ற புகழ்பெற்ற வணிக மையத்தை நிறுவியது.
- இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ், போர்ச்சுகீசிய இளவரசியை மணந்து சீதனமாக பம்பாய் தீவை பெற்றார். பின்னர் இத்தீவை ஆங்கில கம்பெனி 10 பவுண்டுகள் கொடுத்து வாங்கியது.
- கி.பி.1690 ஆம் ஆண்டு சதாநுதி (கல்கத்தா) என்ற இடத்தில் ஜாப் சார்னாக் என்ற ஆங்கிலேயர் ஓர் வணிக மையத்தை நிறுவினார். இங்கு தான் வலுவான வில்லியம் கோட்டை கட்டப்பட்டது.
- பிளாசி மற்றும் பக்சார் போர்களுக்கு பிறகு ஆங்கில கம்பெனி ஓர் அரசியல் சக்தியாக மாறியது.

## IX. உயர் சிந்தனை வினா

**1. கான்ஸ்டாண்டி நோபிள் வீழ்ச்சி ஐரோப்பிய நாடுகளை எவ்வாறு பாதித்தது?**

- உலக வரலாற்றில் கான்ஸ்டாண்டி நோபிளின் வீழ்ச்சி ஒரு முக்கிய மைல் கல்லாகக் கருதப்படுகிறது.
- வாணிபத்தைப் பொருத்தவரையில் கான்ஸ்டாண்டி நோபிள் ஒரு சாதகமான இடத்தில் அமைந்திருந்தது. கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளுக்கிடையே நடந்த வாணிபத் தொடர்பு இதன் வழியாக நடைபெற்றது.
- 1453 ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டி நோபிளைத் துருக்கியர் கைப்பற்றினர். அவர்கள் கிழக்கு மத்திய தரைக் கடல் வழியாக கீழநாடுகளோடு நடந்த வாணிபத்தைத் தடை செய்தனர்.
- கான்ஸ்டாண்டி நோபிள் வழியாகச் சென்ற பொருட்களுக்கு அதிக வரிகளை விதித்தனர்.
- மேலும் அவர்கள் ஐரோப்பிய வணிகர்களைத் துன்புறுத்தவும் தொடங்கினர். இதனால் பழைய வழித்தடங்கள் அடைபட்டுப் போயின.
- இதன் விளைவாக கிழக்கு நாடுகளிலிருந்து ஐரோப்பாவிற்குப் பொருட்கள் வருவது தடைபட்டது.
- ஆனால் ஐரோப்பியர்கள் பொன் கொழிக்கும் கிழக்கு நாடுகளோடு (Golden East) நடைபெற்ற வாணிபத்தை இழக்க விரும்பவில்லை. ஏனெனில் தாங்கள் மிகவும் விரும்பிய நறுமணப் பொருட்களை இப்போது பெற முடியவில்லை. எனவே ஐரோப்பியர் புதிய கடல் வழிகளைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டனர்.

## X. மாணவர் செயல்பாடு (மாணவர்களுக்கானது)

**1. நவீன இந்திய ஆதாரங்களை தொகுத்து ஒரு அட்டவணை தயார் செய்க.**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி II - கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. 'சென்னை நாட்குறிப்பு பதிவுகள்' எப்போது வெளியிடப்பட்டது?
அ) 1916 ஆ) 1917 இ) 1949 ஈ) 1935 **விடை: ஆ) 1917**

2. இந்தியாவின் முதல் நாணயம் _______ ஆட்சியில் வெளியிடப்பட்டது.
அ) பிரெஞ்சுக்காரர்கள் ஆ) போர்ச்சுகீசியர்
இ) ஆங்கிலேயர் ஈ) டேனியர் **விடை: இ) ஆங்கிலேயர்**

3. இந்தியப் பெண்களுடனான போர்ச்சுகீசிய திருமணங்களை ஊக்குவித்தவர்?
அ) நினோ-டி-குன்கா ஆ) வாஸ்கோடகாமா
இ) அல்மெய்டா ஈ) அல்போன்சோ-டி-அல்புகர்க்
**விடை: ஈ) அல்போன்சோ-டி-அல்புகர்க்**

4. ஆங்கிலேயர்கள் தங்களது முதல் வணிக மையத்தை _______ பகுதியில் நிறுவினர்.
அ) ஆக்ரா ஆ) சூரத் இ) மெட்ராஸ் ஈ) மசூலிப்பட்டினம்
**விடை: ஈ) மசூலிப்பட்டினம்**

5. _______ இந்தியாவின் மிக முக்கியமான மற்றும் வளமான பிரெஞ்சு குடியேற்றமாகும்.
அ) சூரத் ஆ) மசூலிப்பட்டினம் இ) பாண்டிச்சேரி ஈ) மாஹி **விடை: இ) பாண்டிச்சேரி**

| II. கோடிட்ட இடங்களை நிரப்புக. | விடைகள் |
|---|---|
| 1. இந்தியாவில் முதல் பிரெஞ்சு வணிக மையத்தை நிறுவியவர் _______. | **கரோன்** |
| 2. _________ ஆம் ஆண்டு டேனியர்கள் தங்களது அனைத்து குடியேற்றங்களையும் ஆங்கில அரசுக்கு விற்றனர். | **1845** |
| 3. 1690 ஆம் ஆண்டு _______ பகுதியில் ஆங்கிலேய வர்த்தக மையம் நிறுவப்பட்டது. | **சுதாநுதி** |
| 4. _______ பகுதியில் டச்சுக்காரர்கள் கெல்டிரியா கோட்டையைக் கட்டினர். | **பழவேற்காடு** |
| 5. வாஸ்கோடகாமாவின் கடல் வழியை பின்பற்றி இந்தியாவிற்கு வருகை புரிந்தவர் _______. | **பெட்ரோ அல்வாரிஸ் காப்ரல்** |

### III. பொருத்துக

| | இடங்கள் | | கோட்டை | | விடைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | பழவேற்காடு | அ | புனித ஜார்ஜ் கோட்டை | இ | **கெல்டிரியர் கோட்டை** |
| 2 | சென்னை | ஆ | செயின்ட் லூயிஸ் கோட்டை | அ | **புனித ஜார்ஜ் கோட்டை** |
| 3 | கல்கத்தா | இ | கெல்டிரியர் கோட்டை | ஈ | **வில்லியம் கோட்டை** |
| 4 | பாண்டிச்சேரி | ஈ | வில்லியம் கோட்டை | ஆ | **செயின்ட் லூயிஸ் கோட்டை** |

### IV. சரியா, தவறா?

1. இந்தியாவில் தேசிய அருங்காட்சியகம் 1949 ல் நிறுவப்பட்டது. **விடை: சரி**
2. 17ம் நூற்றாண்டில் போர்ச்சுகீசிய அதிகாரம் ஆங்கிலேயரிடம் வீழ்ச்சியடைந்தது. **விடை: தவறு**
3. 1700 ல் சுதாநுதியில் ஒரு கோட்டை கட்டப்பட்டது. **விடை: தவறு**
4. அக்காலத்தில் பழவேற்காட்டிலிருந்து வைரங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. **விடை: சரி**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## V. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை (✓) செய்க

1. **1. பிரான்சிஸ்கோ அல்மெய்டா என்பவர் இந்திய போர்ச்சுகீசிய பகுதிகளின் முதல் கவர்னர்**
   **2. இங்கிலாந்து மன்னர் சார்லஸ் போர்ச்சுகீசிய இளவரசியை மணந்து மெட்ராசை சீதனமாக பெற்றார்.**
   **3. ஆங்கிலேயரால் கட்டப்பட்ட முதல் கோட்டையே புனித ஜார்ஜ் கோட்டை ஆகும்.**
   **4. செராம்பூர் டச்சுக்காரர்களின் இந்தியத் தலைமையிடமாக இருந்தது.**
   அ) 1 மற்றும் 2 சரி ஆ) 2 மற்றும் 3 சரி
   இ) 1 மற்றும் 3 சரி ஈ) 1, 2 மற்றும் 4 சரி **விடை: இ) 1 மற்றும் 3 சரி**

## VI. குறுகிய விடையளி

**1. ஐரோப்பியர்களின் இந்திய வருகைக்கான காரணம் கூறுக.**

➢ இந்தியாவின் ஏராளமான செல்வத்தைப் பற்றி மார்க்கோபோலோ மற்றும் சில வெளிநாட்டுப் பயணிகளின் பயணக் குறிப்புகளிலிருந்து ஐரோப்பியர்கள் அறிந்து கொண்டனர். இக்குறிப்புகள் ஐரோப்பியர்களை இந்தியாவை நோக்கி ஈர்த்தது.
➢ இதுவே ஐரோப்பியர்களின் இந்திய வருகைக்கான காரணம் ஆகும்.

**2. ஆனந்த ரங்கம் பற்றி குறிப்பு வரைக**

➢ தமிழ் வரலாற்றுக் குறிப்பு ஆவணங்களில் முக்கிய பங்காற்றியவர் ஆனந்தரங்கம். இவர் பாண்டிச்சேரி பிரெஞ்சு வர்த்தகத்தில் மொழி பெயர்ப்பாளராக இருந்தார்.
➢ 1736 லிருந்து 1760 வரை அவர் எழுதிய பிரெஞ்சு இந்திய உறவு முறை பற்றிய அன்றாட நிகழ்வுகளின் குறிப்புகள் அரசியல் தீர்வுகளை வெளிப்படையாக விளக்கும் வரலாற்றாதாரமாக உள்ளன.

**3. தமிழ்நாடு ஆவணக்காப்பகம் பற்றி குறிப்பு வரைக?**

➢ தற்போது தமிழ்நாடு ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படும் சென்னை பதிப்பாசனம் சென்னையில் அமைந்துள்ளது.
➢ இது தென்னிந்தியாவின் மிகப் பழமையான மற்றும் மிகப்பெரிய களஞ்சியங்களுள் ஒன்றாகும்.
➢ அங்குள்ள பெரும்பாலான ஆவணங்கள் ஆங்கிலத்தில் உள்ளன. மேலும் அங்கு டச்சு, டேனிஷ், பாரசீக, மராத்திய நிர்வாக பதிவுகளின் தொகுப்புகள் பிரெஞ்சு, போர்ச்சுக்கீசிய, தமிழ், உருது போன்ற மொழிகளில் உள்ளன.

## VII. விரிவான விடையளி

**1. பிரெஞ்சுக்காரர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?**

➢ வியாபாரத்திற்காக இந்தியாவிற்கு வருகை தந்த ஐரோப்பிய நாடுகளுள் கடைசி ஐரோப்பிய நாடு பிரான்சு ஆகும்.
➢ பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம், மன்னர் பதினான்காம் லூயியின் அமைச்சரான கால்பர்ட் என்பவரால் 1664 ல் உருவாக்கப்பட்டது.
➢ கி.பி 1667 ல் பிரான்காய்ஸ் கரோன் தலைமையின் கீழ் ஒரு குழு இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டது
➢ இந்தியாவில் முதல் பிரெஞ்சு வணிக மையத்தை கரோன், சூரத் நகரில் நிறுவினார்.
➢ கி.பி 1669 ல் மார்காரா கோல்கொண்டா சுல்தானின் அனுமதி பெற்று பிரான்சின் இரண்டாவது வர்த்தக மையத்தை மசூலிப்பட்டினத்தில் நிறுவினார்.
➢ கி.பி 1673 ல் பிஜப்பூர் ஆட்சியாளர் ஷெர்கான் லோடிக்கு வழங்கப்பட்ட மானியத்தின் கீழ், மார்ட்டின் பாண்டிச்சேரியில் குடியேற்றத்தை நிறுவினார்.
➢ பாண்டிச்சேரி இந்தியாவின் மிக முக்கியமான மற்றும் வளமான பிரெஞ்சு குடியேற்றமானது. பாண்டிச்சேரியில் செயிண்ட் லூயிஸ் எனப்படும் கோட்டையை பிரான்காய்ஸ் மாட்டின் என்பவர் காட்டினார்.
➢ வங்காளத்தின் முகலாய ஆளுநரான செயிஸ்டகானின் அனுமதி பெற்று 1673 ல் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி கல்கத்தாவுக்கு அருகே சந்திரநாகூர் என்ற நகரை நிர்மாணித்தது.




Kindly send me your study materials to padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.CBSEtips.in



- பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் இந்தியாவில் பல்வேறு இடங்களில் வர்த்தக மையங்களை நிறுவியது. குறிப்பாக கடலோரப் பகுதிகளான மாஹி, காரைக்கால், பாலசோர் மற்றும் காசிம் பசார் போன்றவை முக்கியமான பிரெஞ்சு வர்த்தக மையங்கள் ஆகும்.
- கி.பி. 1742 ல் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியின் ஆளுநராக ஜோசப் பிராங்காய்ஸ் டியூப்ளே என்பவர் நியமனம் செய்யப்பட்டார். அவரது நியமனத்தின் மூலம் பிரெஞ்சு அதிகாரம் மேலும் பலப்படுத்தப்பட்டது.

## VIII. மனவரைபடம்






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

வரலாறு
அலகு - 2

# வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை

## பகுதி I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. **1757 ஆம் ஆண்டில் வங்காளத்தை ஆட்சி செய்தவர்**
அ) சுஜா - உத் - தௌலா ஆ) சிராஜ் - உத் - தௌலா
இ) மீர்காசிம் ஈ) திப்பு சுல்தான **விடை: ஆ) சிராஜ் - உத் - தௌலா**

2. **பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு**
அ) 1757 ஆ) 1764 இ) 1765 ஈ) 1775 **விடை: அ) 1757**

3. **பக்சார் போரின் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கை**
அ) அலகாபாத் உடன்படிக்கை ஆ) கர்நாடக உடன்படிக்கை
இ) அலிநகர் உடன்படிக்கை ஈ) பாரிசு உடன்படிக்கை **விடை: அ) அலகாபாத் உடன்படிக்கை**

4. **பாண்டிச்சேரி உடன்படிக்கையின்படி _____ கர்நாடக போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.**
அ) முதல் ஆ) இரண்டாம் இ) மூன்றாம் ஈ) ஏதுமில்லை **விடை: ஆ) இரண்டாம்**

5. **ஹைதர் அலி மைசூர் அரியணை ஏறிய ஆண்டு ______.**
அ) 1756 ஆ) 1761 இ) 1763 ஈ) 1764 **விடை: ஆ) 1761**

6. **மங்களூர் உடன்படிக்கை இவர்களுக்கு இடையே கையெழுத்தானது.**
அ) பிரெஞ்சுக்காரர்கள் மற்றும் திப்பு சுல்தான்
ஆ) ஹைதர் அலி மற்றும் கள்ளிக்கோட்டை மன்னர் சாமரின்
இ) ஆங்கிலேயர் மற்றும் திப்பு சுல்தான்
ஈ) திப்பு சுல்தான் மற்றும் மராத்தியர்கள் **விடை: இ) ஆங்கிலேயர் மற்றும் திப்பு சுல்தான்**

7. **மூன்றாம் ஆங்கிலேய - மைசூர் போரின் போது ஆங்கிலேய தலைமை ஆளுநர் ______.**
அ) இராபர் கிளைவ் ஆ) வாரன் ஹேஸ்டிங்ஸ்
இ) காரன்வாலிஸ் ஈ) வெல்லெஸ்லி **விடை: இ) காரன்வாலிஸ்**

8. **ஆங்கிலேயருடன் பசீன் உடன்படிக்கை செய்து கொண்டவர் ________.**
அ) இரண்டாம் பாஜிராவ் ஆ) தௌலத்ராவ் சிந்தியா
இ) ஷாம்பாஜி போன்ஸ்லே ஈ) ஷாயாஜி ராவ் கெய்க்வாட் **விடை: அ) இரண்டாம் பாஜிராவ்**

9. **மராத்திய பேரரசின் கடைசி பீஷ்வா ______.**
அ) பாலாஜி விஸ்வநாத் ஆ) இரண்டாம் பாஜிராவ்
இ) பாலாஜி பாஜிராவ் ஈ) பாஜிராவ் **விடை: ஆ) இரண்டாம் பாஜிராவ்**

10. **துணைப்படைத் திட்டத்தில் இணைத்துக் கொண்ட முதல் இந்திய சுதேச அரசு எது?**
அ) அயோத்தி ஆ) ஹைதராபாத் இ) உதய்பூர் ஈ) குவாலியர் **விடை: ஆ) ஹைதராபாத்**

| II. கோடிட்ட இடங்களை நிரப்புக | விடைகள் |
|---|---|
| 1. அலிநகர் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட ஆண்டு ________. | 1757 - பிப்ரவரி - 9 |
| 2. சிராஜ் உத் - தௌலாவின் தலைமை படைத் தளபதி ________. | மீர்ஜாபர் |
| 3. இரண்டாம் கர்நாடகப் போருக்கான முக்கிய காரணம் ________. | வாரிசுரிமை பிரச்சனை |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | |
|---|---|
| 4. இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை விரிவுப்படுத்துவதற்காக வாரிசு இழப்புக் கொள்கையை கொண்டு வந்தவர் ________. | **டல்ஹௌசி பிரபு** |
| 5. திப்பு சுல்தானை இறுதியாக தோற்கடித்தவர் ________. | **ஆர்தர் வெல்லெஸ்லி** |
| 6. திப்பு சுல்தான் இறப்புக்கு பின் ________ வசம் மைசூர் ஒப்படைக்கப்பட்டது. | **மூன்றாம் கிருஷ்ண ராஜ உடையார்** |
| 7. 1800 ஆம் ஆண்டு கல்கத்தாவில் உள்ள வில்லியம் கோட்டையில் ஒரு கல்லூரியை நிறுவியவர் ________. | **வெல்லெஸ்லி பிரபு** |

## III. பொருத்துக

| | I | | II | | விடைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | அய்-லா-சப்பேல் உடன்படிக்கை | அ | முதல் ஆங்கிலேய மைசூர் போர் | **ஆ** | **முதல் கர்நாடகப் போர்** |
| 2 | சால்பை உடன்படிக்கை | ஆ | முதல் கர்நாடகப் போர் | **ஈ** | **முதல் மராத்திய போர்** |
| 3 | பாரிசு உடன்படிக்கை | இ | மூன்றாம் கர்நாடகப் போர் | **இ** | **மூன்றாம் கர்நாடகப் போர்** |
| 4 | ஸ்ரீரங்கபட்டின உடன்படிக்கை | ஈ | முதல் மராத்திய போர் | **உ** | **மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர்** |
| 5 | மதராஸ் உடன்படிக்கை | உ | மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர் | **அ** | **முதல் ஆங்கிலேய மைசூர் போர்** |

## IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக.

1. அலிவர்திகான் மறைவுக்கு பின்னர் சிராஜ் - உத் - தௌலா வங்காளத்தின் அரியணை ஏறினார். **விடை : சரி**
2. பிளாசிப் போரில் ஆங்கிலேயப் படையை வழி நடத்தியவர் ஹெக்டர் மன்றோ ஆவார். **விடை : தவறு**
3. ஐரோப்பாவில் வெடித்த ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் இரண்டாம் கர்நாடகப் போருக்கு இட்டுச் சென்றது. **விடை : தவறு**
4. வங்காளத்தின் வில்லியம் கோட்டையில் உள்ள உச்ச நீதிமன்றத்தின் முதல் தலைமை நீதிபதி சர் எலிஜா இம்பே ஆவார். **விடை : சரி**
5. காரன் வாலிஸ் பிரபு காவல் துறையை உருவாக்கினார். **விடை : சரி**

## V. கீழ்க்கண்டவைகளுள் சரியாக பொருந்தியுள்ளது எது?

1. அடையாறு போர் - 1748
2. ஆம்பூர்போர் - 1754
3. வந்தவாசிப் போர் - 1760
4. ஆற்காட்டுப் போர் - 1749

**விடை: 3. வந்தவாசிப் போர் - 1760**

## VI. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி

**1. இருட்டறை துயரச் சம்பவம் பற்றி குறிப்பு வரைக.**

**இருட்டறை துயரச் சம்பவம் - 1756:**

- சிராஜ் - உத் - தௌலாவின் படைவீரர்கள் 146 ஆங்கிலேயர்களை கல்கத்தாவில் உள்ள வில்லியம் கோட்டையில் ஓர் சிறிய காற்றுபுகாத இருட்டறையில் அடைத்தனர்.
- மறுநாள் காலை அவர்களுள் 123- பேர் மூச்சு திணறி இறந்திருந்தனர். 23 - பேர் உயிர்பிழைத்தனர்.
- இது வரலாற்றின் 'இருட்டறை துயரச் சம்பவம்' என அழைக்கப்படுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. பிளாசிப் போருக்குபின் ஆங்கிலேயர்கள் பெற்ற சலுகைகள் யாவை?**

- வங்காள கருவூலத்தின் மூலம் கிடைத்த பெரும் செல்வத்தைக் கொண்டு இராணுவத்தை பலப்படுத்தியது.
- பிளாசிப்போரின் வெற்றி ஆங்கிலேய அரசு அதிகாரத்தை இந்தியாவில் தொடங்கி வைத்தது.
- 2 - நூற்றாண்டுகள் ஆங்கிலேயர் ஆதிக்கம் நீடிக்கச் செய்தது.

**3. பக்சார் போருக்கான காரணங்களை குறிப்பிடுக.**

- ஆங்கிலேயர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற மீர்ஜாபர் தவறியதால் அவரது மருமகன் மீர்காசிமை வங்காள நவாப் ஆக்கினார்கள்.
- தஸ்தக் என்றழைக்கப்படும் சுங்கவரி விலக்கு ஆணையை தவறாக பயன்படுத்திய ஆங்கிலேயர் மீது மீர்காசிம் கோபமடைந்து கலகத்தில் ஈடுபட்டார்.
- ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்ட மீர்காசிம் அயோத்தி சென்று சுஜா - உத் - தௌலா, 2 - ம் ஷா ஆலம் ஆகியோருடன் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராக ஒரு படையை உருவாக்கினார்.

**4. முதல் ஆங்கிலேய மைசூர் போருக்கான காரணங்கள் யாவை?**

- ஹைதர் அலியின் வளர்ச்சியும், பிரெஞ்சுக்காரர்களிடம் அவர் கொண்டிருந்த நட்புறவு ஆகியன கிழக்கிந்திய கம்பெனியின் எதிர்ப்புக்கு காரணமாயின.
- மராத்தியர்கள், ஹைராபாத் நிசாம் ஆங்கிலேயர்கள் இணைந்து ஹைதர் அலிக்கு எதிராக முக்கூட்டணியை ஏற்படுத்தினர் இது முதல் ஆங்கிலேய மைசூர் போருக்கான காரணங்கள் ஆகும்.

**5. மூன்றாம் மராத்திய போரின் விளைவுகள் யாவை?**

- போர் முடிவில் மராத்திய கூட்டமைப்பு கலைக்கப்பட்டு, பேஷ்வா பதவி ஒழிக்கப்பட்டது.
- 2-ம் பாஜிராவின் பகுதிகள் பம்பாயோடு இணைக்கப்பட்டது. அவருக்கு வருடாந்திர ஓய்வூதியம் வழங்கப்பட்டது.
- தோற்கடிக்கப்பட்ட போன்ஸ்லே, ஹோல்கரின் மராத்திய பகுதிகளான நாக்பூர், இந்தூர் ஆகியவை ஆங்கிலேயர்களால் கையகப்படுத்தப்பட்டன.

**6. துணைப்படைத் திட்டத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் பெயர்களை குறிப்பிடுக.**

- ஹைதராபாத்
- தஞ்சாவூர்
- அயோத்தி
- குவாலியர்
- இந்தூர்
- ஜெய்பூர்
- உதய்பூர் மற்றும் ஜோத்பூர்.

## VII. விரிவான விடையளி

**1. இரண்டாம் கர்நாடக போர் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.**

**1) கர்நாடகா :**

- கர்நாடகம் மற்றும் ஹைதராபாத் பகுதிகளில் ஏற்பட்ட வாரிசுரிமைப் பிரச்சனையே இப்போருக்கு காரணமாக அமைந்தது.

**2) ஆம்பூர் போர் (1749):**

- ஆம்பூர் 1749 - ஆண்டு 3 -ல் நடைபெற்ற போரில் பிரெஞ்சு கவர்னர் டியூப்ளே, சந்தா சாகிப் முசாபர்ஜங் ஆகியோரின் கூட்டுப் படையால் கர்நாடக நவாப் அன்வாருதீன் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார். இவரது மகன் திருச்சிக்கு தப்பி ஓடினார்.
- சந்தா சாகிபை பிரெஞ்சுக்காரர்கள் நவாப் ஆக்கினர். இதற்கு ஈடாக பாண்டிச்சேரியை சுற்றியுள்ள 80 கிராமங்களை வெகுமதியாக வழங்கினார்.
- தக்காணத்தில் பிரெஞ்சுக்காரர்களால் நாசிர்ஜங் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டதால் முசாபர் ஜங் ஜதராபாத்தின் நிஜாம் ஆனார்.

**3) ஆற்காட்டுப் போர் (1751):**

- டியூப்ளே திருச்சி கோட்டையை முற்றுகையிட ஒரு படையை அனுப்பினார். சந்தாசாகிப் தன்னை பிரெஞ்சுப் படைகளோடு இணைத்துக் கொண்டார். இச்சமயம் ஆற்காட்டை தாக்க இராபர்ட் கிளைவ் கம்பெனியிடம் அனுமதி கோரினார்.
- கவர்னர் சாண்டர்ஸ் இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கினார். 200 ஆங்கிலப் படையினர் 300 இந்திய படைவீரர்களுடன் கிளைவ் ஆற்காட்டை தாக்கி கைப்பற்றினார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- அன்வாருதீனின் மகன் முகமது அலி ஆங்கிலேயரின் உதவியுடன் ஆற்காடு நவாப் ஆனார்.
- டியூப்ளேக்கு பின் பிரெஞ்சு ஆளுநராக கோதேயூ ஆங்கிலேயருடன் பாண்டிச்சேரி உடன்படிக்கையை 1755 -ல் செய்து கொண்டார்.
- இந்த உடன்படிக்கையின் படி இருநாடுகளும் தங்கள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாது போருக்கு முன் இருந்த பகுதிகளை அவரவரிடம் ஒப்படைக்கப்படும் எனக் கூறப்பட்டது. இதன்படி ஆங்கிலேயர்கள் மேலும் வலிமை பெற்றனர்.

**2. நான்காம் ஆங்கிலேய மைசூர் போர் பற்றி எழுதுக.**

**நான்காம் ஆங்கிலேய - மைசூர் போர் (1799):**

திப்பு சுல்தான் 1792 - ல் ஸ்ரீரங்கப்பட்டின உடன்படிக்கை மூலம் காரன்வாலிஸ் அவமரியாதை செய்ததை மறக்கவில்லை.

**காரணங்கள்:**

- திப்பு சுல்தான் ஆங்கிலேயருக்கு எதிரான வெளிநாட்டு கூட்டணிக்காக அரேபியா, துருக்கி ஆப்கானிஸ்தான் மற்றும் பிரான்சு நாடுகளுக்கு தூதர்களை அனுப்பினார்.
- எகிப்து மீது படையெடுத்த நெப்போலியனுடன் திப்பு தொடர்பு வைத்திருந்தார்.
- ஸ்ரீரங்கப்பட்டிணத்திற்கு வருகை புரிந்த பிரெஞ்சு அலுவலர்கள் ஜாக்கோபியின் கழகத்தை நிறுவினர். அங்கு சுதந்திரமரம் ஒன்றும் நடப்பட்டது.

**போரின் போக்கு:**

- 1799-ல் வெல்லெஸ்லி திப்புவின் மீது போர் தொடுத்தார்.
- குறுகிய காலத்தில் நடந்த கடுமையான போராக இருந்தது.
- மேற்கே பம்பாய் இராணுவம் ஆர்தர் வெல்லெஸ்லி தலைமையில் திப்பு சுல்தானை தாக்கியது.
- திப்பு தலைநகரம் ஸ்ரீரங்கப்பட்டினத்திற்கு பின் வாங்கினார்.
- 1799 - மே- 4 - ல் ஸ்ரீரங்கப்பட்டினம் கைப்பற்றப்பட்டது.
- திப்பு வீரமாக போரிட்டாலும் இறுதியில் கொல்லப்பட்டார்.
- நான்காம் மைசூர் போர் முடிவில் ஒட்டு மொத்த மைசூரும் ஆங்கிலேயரிடம் சரணடைந்தது.

**போருக்கு பின் மைசூர்:**

- கனரா, வயநாடு, கோயமுத்தூர், தாராபுரம் ஆகிய பகுதிகளை ஆங்கிலேயர் இணைத்து கொண்டனர்.
- இந்து உயர்குடும்பத்தை சேர்ந்த 3 -ம் கிருஷ்ண ராஜா உடையார் மைசூர் அரியணை ஏறினார்.
- திப்புவின் குடும்பம் வேலூருக்கு அனுப்பப்பட்டது.

**3. பிரிட்டிஷ் ஆட்சியை விரிவுபடுத்த டல்ஹௌசி பிரபு கொண்டு வந்த கொள்கையை பற்றி விவரி.**

**வாரிசு இழப்புக் கொள்கை (1848):**

- டல்ஹௌசி பிரபு இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கத்தை உயர்த்துவதில் முதன்மை சிற்பி ஆனார்.
- ஆங்கிலேய பேரரசை விரிவுப்படுத்துவதற்காக வாரிசு இழப்புக் கொள்கை என்ற புதிய கொள்கையை 1848 -ல் கொண்டு வந்தார்.
- இக்கொள்கையின் படி சுதேச மன்னர்கள் ஆங்கிலேயர் அனுமதியின்றி வாரிசுகளை தத்தெடுக்கும் போது மன்னரின் சொத்துக்கள் தத்தெடுத்த பிள்ளைக்கும் ஆட்சிப்பகுதி ஆங்கில சக்திக்கும் செல்ல நேரிடும் எனப்பட்டது.
- இந்தியர்கள் இக்கொள்கையை கடுமையாக எதிர்த்தனர்.
- 1857 - ஆண்டு புரட்சிக்கு இக்கொள்ளை மூலக்காரணமாக அமைந்தது.

**4. வெல்லெஸ்லி பிரபு எவ்வாறு ஆங்கிலேய ஆதிக்கத்தை இந்தியாவில் விரிவுபடுத்தினார்?**

**துணைப்படைத் திட்டம் (1798):**

- இந்திய சுதேச அரசுகளை ஆங்கிலேயர் கட்டுப்பாட்டில் கொண்டுவர வெல்லெஸ்லி பிரபுவால் கொண்டுவரப்பட்ட திட்டம் துணைப் படைத் திட்டம்.
- ஆங்கில ஆட்சியை விரிவுபடுத்தவும் அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்தவும் இது சிறந்த கருவியாக பயன்படுத்தப்பட்டது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**துணைப்படைத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:**

- இத்திட்டத்தில் இணையும் இந்திய அரசர் தன்னுடைய படையை கலைத்துவிட்டு ஆங்கில படையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.
- சுதேச அரசின் தலைமையகத்தில் ஆங்கில பிரதிநிதி ஒருவர் இருப்பார்.
- ஆங்கில படையை பராமரிக்கவும், படைவீரர்களுக்கு ஆண்டு சம்பளம் வழங்கவும் நிரந்தரமாக சில பகுதிகளை ஆங்கில அரசுக்கு கொடுக்க வேண்டும்.
- ஆங்கிலேயரைத் தவிர மற்ற ஐரோப்பியர்கள் யாரும் அந்நாட்டில் இருக்க கூடாது.
- இவ்வாறு ஆங்கில ஆதிக்கத்தை வெல்லெஸ்லி இந்தியாவில் விரிவுபடுத்தினார்.

## VIII. உயர் சிந்தனை வினா

**1. இந்தியாவில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் வெற்றிக்கான காரணங்களை விளக்குக.**

- இந்தியாவில் ஆங்கிலேயருக்கு எதிராகக் கடும் போட்டியிட்டவர்கள் பிரெஞ்சுக்காரர்களே.
- ஆயினும் இந்தியாவில் தங்களது மேலாண்மையை நிலை நாட்டுவதில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றனர்.

**இந்தியாவில் ஆங்கிலேயரின் வெற்றிக்கான காரணங்கள் பின்வருமாறு:**

- ஆங்கிலேயரிடம் மிகுந்த பண பலமும், படை வலிமையும் இருந்தது.
- ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குத் தேவையான எல்லா உதவிகளையும் ஆங்கில அரசு செய்தது.
- ஆங்கிலேயருக்கு சிறந்த வாணிப வசதிகள் இருந்தன.
- ஆங்கிலேயரிடம் மிக வலிமையான கப்பற்படை இருந்தது.
- ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் உயர் அதிகாரிகளுக்கிடையே நல்ல புரிந்துணர்வு இருந்தது.
- நெசவுத் தொழிலில் ஏற்பட்ட முன்னேற்றமும் ஒரு முக்கிய காரணமாகும்.
- ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பொருளாதார வளமும், இராஜதந்திரமும் அவர்களின் வெற்றிக்கு காரணமாகும்.
- ஆனால் இந்திய வணிகர்களுக்குப் போதுமான பாதுகாப்பு இல்லை.
- இந்திய மன்னர்களின் ஏற்றத்தாழ்வுகளும், அறியாமையும் ஆங்கிலேயரின் வெற்றிக்குக் காரணமாயிற்று.

## X. வாழ்க்கைதிறன் பயிற்சி (மாணவர்களுக்கானது)

**1. ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் ஆகியோரின் புகைப்படங்கள், கதைகள், கவிதைகள் மற்றும் தகவல்களை தொகுத்தல்.**

## XI. செயல்திட்டம் மற்றும் செயல்பாடு (மாணவர்களுக்கானது)

**1. ஆங்கிலேயர்களால் இந்திய அரசர்கள் தோற்கடிக்கப்பட்டதற்கான காரணங்களை விவாதம் செய்க.**

# பகுதி II - கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. பக்சார் அமைந்துள்ள நதிக்கரை**

அ) கங்கை ஆ) காவிரி இ) பிரம்மபுத்திரா ஈ) ஹிக்ளி **விடை: அ) கங்கை**

**2. அடையாறு போரில் கர்நாடக படைத்தளபதி**

அ) யூசுப்கான் ஆ) மாபூஸ்கான் இ) அன்வாருதீன் ஈ) சந்தா சாகிப்

**விடை: ஆ) மாபூஸ்கான்**

**3. முகமது அலி தஞ்சம் புகுந்த கோட்டை**

அ) வேலூர் ஆ) வில்லியம் கோட்டை இ) ஜார்ஜ் ஈ) திருச்சி **விடை: ஈ) திருச்சி**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. டியூப்ளேவை பாரிசுக்கு திரும்ப அழைக்க வைத்த போர்**

அ) அடையாறு ஆ) வந்தவாசி இ) ஆற்காடு ஈ) ஆம்பூர் **விடை: இ) ஆம்பூர்**

| II. கோடிட்ட இடங்களை நிரப்புக | விடைகள் |
|---|---|
| 1. ஐரோப்பாவில் வெடித்த ____ போர் இந்தியாவில் மூன்றாம் கர்நாடகப் போருக்கு வழிவகுத்தது. | **ஏழாண்டுப்** |
| 2. இரண்டாம் ஆங்கில மைசூர் போரில் ஹைதர் அலி தோற்கடிக்கப்பட்ட இடம் ______. | **போர்ட் நோவா** |
| 3. 1863 - ல் ஐ.சி.எஸ் தேர்வில் தேர்ச்சி பெற்ற முதல் இந்தியர் ____. | **சத்யேந்திரநாத் தாகூர்** |
| 4. போட்டித் தேர்வு மூலம் அரசு ஊழியர் நியமனம் என்பதை _______ சட்டம் அறிமுகப்படுத்தியது. | **பட்டயச்** |

| III. பொருத்துக | | | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1 | குடிமைப் பணிகள் | அ | ஆங்கில வீரர்கள் | **ஆ** | **வரி வசூலித்தல்** |
| 2 | தானாக்கள் | ஆ | வரி வசூலித்தல் | **இ** | **தரோகா** |
| 3 | பீரங்கிபடை | இ | தரோகா | **அ** | **ஆங்கில வீரர்கள்** |

## IV. சரியா? தவறா?

1. வங்காளத்தில் ஜீரி முறையை கொண்டு வந்தவர் வெல்லெஸ்லி பிரபு. **விடை : தவறு**
2. துணைப்படைத் திட்டம் சுதேச அரசுகளின் வெளியுறவுக் கொள்கையை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. **விடை : தவறு**
3. வந்தவாசிப்போர் பாண்டிச்சேரி உடன்படிக்கை மூலம் முடிவுக்கு வந்தது. **விடை : சரி**

## V. கீழ்கண்டவைகளுள் தவறாக பொருத்துயுள்ளது எது?

1. ஹைதர் அலி - மைசூர்
2. டியூப்ளே - ஆங்கில ஆளுநர்
3. வட சர்க்கார் - ஆந்திரா, ஒடிசா
4. இராபர்ட் கிளைவ் - ஆங்கில படைத்தளபதி

**விடை: 2. டியூப்ளே - ஆங்கில ஆளுநர்**

## VI. குறுகிய விடையளி

**1. அய்லா - சப்பேல் உடன்படிக்கை குறித்து எழுதுக?**

- ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரின் முடிவில் 1748-ல் செய்து கொள்ளப்பட்டது.
- இதன்படி முதல் கர்நாடகப் போர் முடிவுக்கு வந்தது. மதராஸ் ஆங்கிலேயரிடமும், வட அமெரிக்காவில் சில பகுதிகள் பிரான்சிடமும் ஒப்படைக்கப்பட்டது.

**2. மராத்தா கூட்டமைப்பால் சுதந்திரமான மாநிலங்கள் யாவை?**

- புனே
- பரோடா
- நாக்பூர்
- இந்தூர்
- குவாலியர்

**3. வாரிசு இழப்புக் கொள்கையின் மூலம் டல்ஹௌசி இணைத்துக் கொண்ட பகுதிகள் யாவை?**

- சதாரா
- ஜெய்ப்பூர்
- சம்பல்பூர்
- பாகத்
- உதய்பூர்
- ஜான்சி மற்றும் நாக்பூர்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## VII. விரிவான விடையளி

**1. ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றதற்கான காரணங்கள் விவரி.**

- ஆங்கிலேயர்கள் மிகப்பெரிய கடல் வலிமை பெற்றிருந்தனர்.
- நெசவுத் தொழில் வளர்ச்சி அடைந்திருந்தது.
- அறிவியல் ரீதியாக பிரிக்கப்பட்ட தொழிலாளர்கள்.
- பொருளாதார வளர்ச்சி மற்றும் திறமைமிக்க இராஜதந்திரம்.
- இந்திய வணிகர்களிடையே நிலவிய பாதுகாப்பின்மை.
- இந்திய அரசர்களின் சமத்துவமின்மை மற்றும் அறியாமை இவையே ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றதற்கான காரணங்கள் ஆகும்.

**2. இந்தியாவில் ஆங்கில நிர்வாகத்தில் காணப்பட்ட நீதித்துறை குறித்து விவரி.**

- 1772-ல் இரட்டை ஆட்சியை ஒழித்து வரிவசூல் மற்றும் நீதி வழங்கும் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டது.
- சிவில் நீதிமன்றமான திவானி அதாலத் மற்றும் குற்றவியல் நீதிமன்றமான பௌஜ்தாரி அதாலத் ஏற்படுத்தப்பட்டது.
- ஒழுங்கு முறை சட்டப்படி கல்கத்தாவில் உச்சநீதிமன்றம் அமைக்கப்பட்டு ஒரு முதன்மை நீதிபதியும் மூன்று துணை நீதிபதிகளையும் பிரிட்டிஷார் நியமித்தனர்.
- இதைப்போன்று 1801-ல் மதராஸிலும் 1823-ல் பம்பாயிலும் உச்ச நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன.
- சட்டங்களை தொகுக்க சட்ட ஆணையம் அமைக்கப்பட்டு நாடு முழுவதும் சட்டத்தின் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது.
- 1861-ம் ஆண்டு கல்கத்தா, பம்பாய், மதராஸ் ஆகிய இடங்களில் உச்ச நீதிமன்றங்களுக்குப் பதில் 3-ல் உயர்நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

☺ ☺ ☺ ☺ ☺



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## VIII. மனவரைபடம்

### வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை

**ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் அரசியல் வலிமை மற்றும் எழுச்சி**

இருட்டறை துயரச் சம்பவம்
↓
பிளாசிப் போர்
↓
பக்சார் போர்

**கர்நாடகப் போர்**

- முதல் கர்நாடகப் போர் → 1746 - 1748
- இரண்டாம் கர்நாடகப் போர் → 1749 - 1754
- மூன்றாம் கர்நாடகப் போர் → 1756 - 1763

---

**ஆங்கிலேய மைசூர் போர்கள்**

- முதல் ஆங்கிலேய - மைசூர் போர் → 1767 - 1769
- இரண்டாம் ஆங்கிலேய - மைசூர் போர் → 1780 - 1784
- மூன்றாம் ஆங்கிலேய - மைசூர் போர் → 1790 - 1792
- நான்காம் ஆங்கிலேய - மைசூர் போர் → 1799

---

**ஆங்கிலேய மராத்தியப் போர்கள்**

- முதல் ஆங்கிலேய மராத்தியப் போர் → 1775 - 1782
- இரண்டாம் ஆங்கிலேய மராத்தியப் போர் → 1803 - 1805
- மூன்றாவது ஆங்கிலேய மராத்தியப் போர் → 1817 - 1818

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

வரலாறு
அலகு - 3

# கிராம சமூகமும் வாழ்க்கை முறையும்

## பகுதி I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

**1. ஜாகீர்தாரி, மல்குஜாரி, பிஸ்வேதாரி போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் நிலவரி முறை எது?**
அ) மகல்வாரி முறை ஆ) இரயத்துவாரி முறை
இ) ஜமீன்தாரி முறை ஈ) இவற்றில் எதுவுமில்லை **விடை : ஈ) இவற்றில் எதுவுமில்லை**

**2. எந்த கவர்னர் – ஜெனரலின் காலத்தில், வங்காளத்தில் நிரந்தர நிலவரித் திட்டம் செய்து கொள்ளப்பட்டது?**
அ) ஹேஸ்டிங்ஸ் பிரபு ஆ) காரன்வாலிஸ் பிரபு
இ) வெல்லெஸ்லி பிரபு ஈ) மிண்டோ பிரபு **விடை : ஆ) காரன்வாலிஸ் பிரபு**

**3. மகல்வாரி முறையில் 'மகல்' என்றால் என்ன?**
அ) வீடு ஆ) நிலம் இ) கிராமம் ஈ) அரண்மனை **விடை : இ) கிராமம்**

**4. மகல்வாரி முறை எந்தப் பகுதியில் செய்துகொள்ளப்பட்டது?**
அ) மகாராஷ்டிரா ஆ) மதராஸ் இ) வங்காளம் ஈ) பஞ்சாப் **விடை : ஈ) பஞ்சாப்**

**5. கீழ்க்காணும் கவர்னர்களுள் மகல்வாரி முறையை அறிமுகப்படுத்தியவர் யார்?**
அ) ஹேஸ்டிங்ஸ் பிரபு ஆ) காரன்வாலிஸ் பிரபு
இ) வெல்லெஸ்லி பிரபு ஈ) வில்லியம் பெண்டிங் பிரபு **விடை : ஈ) வில்லியம் பெண்டிங் பிரபு**

**6. ஆங்கிலேயரால் இரயத்துவாரி முறை அறிமுகப்படுத்தப்படாத பகுதி எது?**
அ) பம்பாய் ஆ) மதராஸ்
இ) வங்காளம் ஈ) இவற்றில் எதுவுமில்லை **விடை : இ) வங்காளம்**

**7. இண்டிகோ (அவுரி) கிளர்ச்சி யாரால் தலைமையேற்று நடத்தப்பட்டது?**
அ) மகாத்மா காந்தி ஆ) கேசப் சந்திர ராய்
இ) திகம்பர் பிஸ்வாஸ் மற்றும் பிஸ்னு பிஸ்வாஸ்
ஈ) சர்தார் வல்லபாய் பட்டேல் **விடை : இ) திகம்பர் பிஸ்வாஸ் மற்றும் பிஸ்னு பிஸ்வாஸ்**

**8. பர்தோலி சத்தியாகிரகம் யார் தலைமையில் நடத்தப்பட்டது?**
அ) சர்தார் வல்லபாய் பட்டேல் ஆ) மகாத்மா காந்தி
இ) திகம்பர் பிஸ்வாஸ் ஈ) கேசப் சந்திர ராய் **விடை : அ) சர்தார் வல்லபாய் பட்டேல்**

| II. கோடிட்ட இடத்தை நிரப்புக. | விடைகள் |
|---|---|
| 1. ________ என்பது ஜமீன்தார் முறையின் திருத்தப்பட்ட முறையாகும். | **மகல்வாரி** |
| 2. மகல்வாரி முறை ________ என்பவரின் சிந்தனையில் உதித்த திட்டம் ஆகும். | **ஹோல்ட் மெகன்சி** |
| 3. இண்டிகோ (அவுரி) கிளர்ச்சி ______ ல் நடைபெற்றது. | **செப்டம்பர் 1859** |
| 4. மாப்ளா கலகம் ___________ ல் நடைபெற்றது. | **ஆகஸ்ட் 1921** |
| 5. 'சம்பரான் விவசாயச் சட்டம்' நிறைவேற்றப்பட்ட ஆண்டு ___________. | **மே – 1918** |

### III. பொருத்துக.

| | I | | II | | விடைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | நிரந்தர நிலவரி திட்டம் | அ | மதராஸ் | ஈ | **வங்காளம்** |
| 2 | மகல்வாரி திட்டம் | ஆ | இண்டிகோ விவசாயிகளின் துயரம் | இ | **வடமேற்கு மாகாணம்** |
| 3 | இரயத்துவாரி முறை | இ | வடமேற்கு மாகாணம் | அ | **மதராஸ்** |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | நீல தர்பன் | ஈ | வங்காளம் | ஆ | **இண்டிகோ விவசாயிகளின் துயரம்** |
| 5 | சந்தால் கலகம் | உ | முதல் விவசாயிகள் கிளர்ச்சி | உ | **முதல் விவசாயிகள் கிளர்ச்சி** |

## IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் ஐந்தாண்டு நிலவரி திட்டத்தை அறிமுகப்படுத்தினார் **விடை: சரி**
2. இரயத்துவாரி முறை, தாமஸ் மன்றோவால் அறிமுகப்படுத்தப்பட்டது. **விடை: சரி**
3. குஜராத்தின் யூ சுப்ஷாகி என்ற பர்கானாவில் பாப்னா கலகம் ஏற்பட்டது **விடை: தவறு**
4. 'பஞ்சாப் நில உரிமை மாற்று சட்டம்' 1918ல் நிறைவேற்றப்பட்டது **விடை: தவறு**

## V. கீழ்க்காணும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை (✓) செய்க

**1. கீழ்க்கண்டவற்றுள் எந்த ஒன்று ஜமீன்தாரி முறைப் பற்றிய தவறான கூற்றாகும்.**

அ) இந்த முறை 1793 ல் அறிமுகப்படுத்தப்பட்டது.
ஆ) ஜமீன்தார்கள் நிலத்தின் உரிமையாளர் ஆவர்.
இ) விவசாயிகளுக்கு இந்த முறையில் ஒரு குறிப்பிட்ட வருவாய் நிலையாக கிடைத்தது.
ஈ) இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 19% நிலப்பரப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

**விடை : இ) விவசாயிகளுக்கு இந்த முறையில் ஒரு குறிப்பிட்டவருவாய் நிலையாக கிடைத்தது.**

**2. கீழ்க்கண்டவற்றுள் இந்தியாவில் நடைபெற்ற விவசாய புரட்சி பற்றிய சரியான கூற்று எது?**

அ) சந்தால் கலகம் வங்காளத்தில் நடைபெற்றது.
ஆ) நீல் தர்பன் என்ற நாடகம் தீன பந்து மித்ராவால் எழுதப்பட்டது.
இ) தக்காண கலகம் 1873ல் பூனாவில் உள்ள கிராமம் ஒன்றில் துவங்கியது.
ஈ) மாப்ளா கலகம் தமிழகத்தில் நடைபெற்றது.

**விடை : ஆ) நீல் தர்பன் என்ற நாடகம் தீன பந்து மித்ராவால் எழுதப்பட்டது.**

## VI. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி

**1. நிரந்தர நிலவரி திட்டத்தின் சிறப்புக்கூறுகள் ஏதேனும் இரண்டினை குறிப்பிடுக.**

➢ ஆங்கில கம்பெனிக்கு வரி செலுத்தும் வரை ஜமீன்தார்கள் நில உடைமையாளர்களானார்கள்.
➢ வரி வசூல் செய்யும் அரசின் முகவர்களாக செயல்பட்டனர்.

**2. இரயத்துவாரி முறையின் சிறப்புக் கூறுகள் யாவை?**

➢ விவசாயிகளுடன் வருவாய் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.
➢ நில அளவு மற்றும் விளைச்சலின் மதிப்பீடு கணக்கிடப்பட்டது.
➢ விளைச்சலில் 45 லிருந்து 50% வரை வரி நிர்ணயிக்கப்பட்டது.

**3. மகல்வாரி முறையின் விளைவுகளைக் கூறுக.**

➢ கிராமத் தலைவர் சலுகைகளை தவறாக பயன்படுத்தினார்.
➢ விவசாயிகளுக்கு இலாபம் இல்லை.
➢ இது ஜமீன்தாரி முறையின் திருத்தியமைக்கப்பட்ட வடிவம், மேலும் கிராம உயர் வகுப்பினருக்கு இலாபமாக அமைந்தது.

**4. 1859 – 60ல் நடைபெற்ற இண்டிகோ (அவுரி) கலகத்திற்கு காரணம் என்ன?**

➢ ஐரோப்பிய வியாபாரிகள் இண்டிகோ (அவுரி) வளர்க்க குத்தகை விவசாயிகளை கட்டாயப்படுத்தியது.
➢ ஆள்கடத்தல், கொள்ளையடித்தல், கசையடி கொடுத்தல் எரித்தல் ஆகியவையும் 1859-60ல் நடைபெற்ற இண்டிகோ கலகத்திற்கு காரணம் ஆகும்.

**5. சம்பரான் சத்தியாகிரகத்தில் மகாத்மா காந்தியின் பங்கினை குறிப்பிடுக?**

➢ மகாத்மா காந்தி சம்பரான் விவசாயிகளுக்கு உதவ முன்வந்தார்.
➢ அரசு விசாரணைக்குழுவில் மகாத்மா காந்தியை உறுப்பினராக சேர்த்துக் கொண்டது.
➢ (மே - 1918ல் சம்பரான் விவசாயத் சட்டம் நிறைவேற்றப்பட்டது)

**6. பர்தோலி சத்தியாகிரகத்தில் வல்லபாய் பட்டேலின் பங்கு பற்றி எழுதுக.**

➢ 1928 ல் ஆங்கில அரசு நிலவருவாயை 30% அளவிற்கு உயர்த்தியது.
➢ பர்தோலி (குஜராத்) விவசாயிகள் உயர்த்தப்பட்ட நிலவரியை செலுத்த மறுப்பு தெரிவித்து சர்தார் வல்லபாய் படேல் தலைமையில் வரிகொடா இயக்கத்தில் ஈடுபட்டனர்.
➢ (பெண்களும் இதில் கலந்து கொண்டனர்)



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## VII. விரிவான விடையளி

**1. நிலையான நிலவரி திட்டத்தின் நிறை, குறைகளை விவாதிக்க.**

**நிலையான நிலவரி திட்டத்தின் நிறைகள் :**

- தரிசு நிலங்கள், காடுகள் விவசாய நிலமாக்கப்பட்டது.
- ஜமீன்தார்கள் நிலத்தின் உரிமையாளர்களாயினர்.
- ஆங்கில அரசுக்கு நிலையான வருவாய் கிடைக்கச் செய்தது.

**குறைகள் :**

- அரசுக்கும், விவசாயிகளுக்கும் நேரடித் தொடர்பு இல்லை.
- விவசாயிகள் உரிகைள் மறுக்கப்பட்டு ஜமீன்தார் பொறுப்பில் விடப்பட்டனர்.
- விவசாயிகள் அடிமைகளாக நடத்தப்பட்டனர்.
- ஜமீன்தார்கள் சோம்பேறிகளாகவும், ஆடம்பர பிரியர்களாகவும் மாறினர்.
- வங்காள கிராமங்களில் ஜமீன்தார்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டது.

**2. ஆங்கிலேயர்களின் நிலவரி திட்டங்கள் இந்திய விவசாயிகள் மீது ஏற்படுத்திய தாக்கங்கள் என்ன?**

**விவசாயிகளின் மீது ஆங்கில நிலவருவாய் முறையின் தாக்கங்கள் :**

- அனைத்து வரிகளும் அதிகபட்ச வருமானம் பெறுவதாக இருந்தது. இது நில விற்பனை, விவசாய அழிவிற்கு வழிவகுத்தது.
- விவசாயிகள் அதிக வரிச்சுமை, பஞ்சம், வறுமை கடன்சுமையால் பாதிக்கப்பட்டனர். எனவே இவர்கள் நிலம், வாங்குவோர், வட்டிக்கு பணம் தருபவர்களை தேடிச் சென்றனர். நிலத்தை வாங்கியவர்கள் செல்வந்தாராயினர்.
- ஜமீன்தார்கள், வட்டிக்காரர்கள், வழக்கறிஞர்களால் விவசாயிகள் சுரண்டப்பட்டனர்.
- ஆங்கில பொருட்களால் இந்திய குடிசைத்தொழில்கள் மறைந்தன.
- புதிய சட்ட அமைப்பு, பழமையான பழக்கங்களை மாற்றியது.
- விவசாயிகளின் உழைப்பின் பலன் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு மட்டும் நன்மையளிப்பதாக இருந்தது.

**3. மாப்ளா கிளர்ச்சி பற்றி ஒரு பத்தியில் எழுதுக.**

**மாப்ளா கிளர்ச்சி : 1921**

- மாப்ளா விவசாயிகள் (கேரளா) இந்து ஜமீன்தார்கள் மற்றும் ஆங்கில அரசால் அடக்கப்பட்டு சுரண்டப் பட்டனர்.
- ஏப் - 1920 ல் நடைபெற்ற மலபார் மாநாடு புரட்சிக்கு உத்வேகம் அளித்தது.
- இம்மாநாடு நிலக்கிழார் - குத்தகைகாரர் இடையிலுள்ள உறவை ஒழுங்குப்படுத்த சட்டம் இயற்ற கோரியது.
- 1921 ல் கிளர்ச்சியின் ஆரம்பத்தில் கிளர்ச்சியாளர்கள் காவல் நிலையங்கள், பொது அலுவலகங்கள், செய்தி தொடர்பு சாதனங்கள் நிலக்கிழார், வட்டிக் கடைக்காரர்களை தாக்கினர்.
- பின்னர் அரசு தலையீட்டின் மூலம் 2337 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர். 1650 பேர் காயமடைந்தனர். 45,000 க்கும் மேற்பட்டோர் சிறை பிடிக்கப்பட்டு 1921 டிசம்பரில் கிளர்ச்சி அடக்கப்பட்டது.

## VIII. உயர் சிந்தனை வினா

**1. வரிகள் மட்டும் அல்லாமல் வேறு எந்த வகைகளில் ஆங்கிலேயர்கள் இந்திய விவசாயிகளின் நிலங்களை சுரண்டினர்.**

- ஆங்கிலேயர்கள் இந்தியப் பொருளாதாரத்தைச் சுரண்டும் கொள்கையைப் பின்பற்றினர்.
- அவர்கள் அறிமுகப்படுத்திய வாரிசு இழக்கும் கொள்கை இந்தியர்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது.
- கிறிஸ்தவப் பாதரியார்கள் கிருஸ்தவ மதத்தைப் பரப்பினர்.
- ஆங்கிலேயர்கள் இந்தியர்களின் சமூக பழக்கவழக்கங்களில் தலையிட்டனர்.
- இந்திய சிப்பாய்கள் இழிவாக நடத்தப்பட்டனர்.
- நாட்டின் பொருளாதாரச் சுரண்டலில் ஏராளமான செல்வம் வெளியேற்றப்பட்டது. இயந்திரத்தினால் செய்யப்பட்ட ஆங்கிலப் பொருட்கள் இந்தியத் தொழிற்சாலைகளைப் பெரிதும் பாதித்தது. எனவே வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது.
- இந்தியர்களுக்கு அரசியலிலும், இராணுவத்திலும் உயர் பதவிகள் மறுக்கப்பட்டன.
- பாரசீக மொழிக்குப் பதிலாக ஆங்கில மொழி புகுத்தப்பட்டது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## IX. செயல்திட்டம் மற்றும் செயல்பாடு (மாணவர்களுக்கானது)

1. காந்தியின் அகிம்சை மற்றும் சத்தியாகிரகத்தை வடிவமைப்பதில் செல்வாக்கு பெற்றது எது என்பது குறித்து எழுதுக.
2. உனது பள்ளியில் கடந்த கால மற்றும் தற்கால விவசாயிகளுக்கிடையே காணப்படும் ஒருமித்த சிறப்புகளை விளக்கும் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்க.

# பகுதி II - கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. 1765 ல் இராபர்ட் கிளைவ் வரிவசூலிக்கும் உரிமையை பெற்ற பகுதி எது?**

அ) வங்காளம், பீகார், ஒரிசா ஆ) பீகார், பஞ்சாப்
இ) வங்காளம், ஒரிசா, பாட்னா ஈ) வங்காளம், பூனா, கேரளா **விடை : அ) வங்காளம், பீகார், ஒரிசா**

**2. விவசாயிகளிடமிருந்து வரியை வசூலிக்கும் முகவர்களாக செயல்பட்டவர்கள்**

அ) அரசர்கள் ஆ) பிரபுக்கள் இ) ஜமீன்தார்கள் ஈ) நிலக்கிழார்கள் **விடை : இ) ஜமீன்தார்கள்**

**3. ஆயுதம் ஏந்திய புரட்சிக்கு இட்டுச் சென்றது எது?**

அ) இண்டிகோ கலகம் ஆ) சந்தால் கலகம்
இ) தக்காண கலகம் ஈ) பாப்னா கலகம் **விடை : ஆ) சந்தால் கலகம்**

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

| | | விடைகள் |
|---|---|---|
| 1. | ____ என்ற செய்தித்தாள் அவுரி சாகுபடியாளர்கள் துயரங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது | **இந்து தேசபக்தன்** |
| 2. | 1937 _____ ஆட்சிக்கு வந்தபோது விவசாயிகள் நிலம் திருப்பி தரப்பட்டது | **காங்கிரஸ்** |

## III. பொருத்துக

| | I | | II | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1 | இந்து ஜமீன்தார்கள் | அ | தக்காண கலகம் | **ஆ** | **ஜென்மிஸ்** |
| 2 | பர்தோலி | ஆ | ஜென்மிஸ் | **இ** | **குஜராத்** |
| 3 | பூனா | இ | குஜராத் | **அ** | **தக்காண கலகம்** |

## IV. சரியா? தவறா?

1. காலனி ஆதிக்கத்திற்கு முன் இந்தியப் பொருளாதாரமானது நெசவுத்தொழிலை கொண்டிருந்தது. **விடை: தவறு**
2. பீகாரில் உள்ள ராஜ்மகால் குன்றுகளுக்கு அருகில் சந்தால் மக்கள் வேளாண்மை செய்து வந்தனர். **விடை: சரி**

## V. கீழ்க்காணும் கூற்றை ஆராய்ந்து சரியான விடையை (✓) செய்யவும்

**1. கீழ்க்கண்டவற்றுள் எந்த ஒன்று சம்பரான் சத்தியாகிரகம் பற்றிய தவறான கூற்றாகும்.**

அ) பீகார் மாநிலத்தில் சட்டத்திற்கு புறம்பான அவுரி சாகுபடி செய்தனர்.
ஆ) மொத்த நிலத்தில் 20ல் 10 பங்கில் அவுரியை சாகுபடி செய்தனர்.
இ) ஐரோப்பிய தோட்டக்காரர்கள் சம்பரான் தீன்கதியா என்ற நடைமுறையின் கீழ் பிணைக்கப்பட்டிருந்தனர்.
ஈ) அரசு மகாத்மா காந்தியை விசாரணைக் குழு உறுப்பினராக சேர்த்துக் கொண்டது.

**விடை : ஆ) மொத்த நிலத்தில் 20ல் 10 பங்கில் அவுரியை சாகுபடி செய்தனர்.**

## VI. குறுகிய விடையளி.

**1. நிலையான நிலவரி திட்டத்தின் பிற பெயர்கள் யாவை?**

➢ ஜமீன்தாரி ➢ ஜாகீர்தாரி ➢ மல்குஜாரி ➢ பிஸ்வேதாரி

**2. இரயத்துவாரி முறை யாரால் எந்தப்பகுதிகளில் கொண்டு வரப்பட்டது?**

➢ இரயத்துவாரி முறை 1820ல் தாமஸ்மன்றோ மற்றும் கேப்டன் ரீட் என்பவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.
➢ மதராஸ், பம்பாய், அசாம் பகுதிகள் மற்றும் கூர்க் ஆகிய இந்திய மாகாணங்களில் கொண்டுவரப்பட்டது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**3. கேடா சத்யாகிரகம் சிறு குறிப்பு வரைக.**

- 1918ல் குஜராத்தின் கேடா மாவட்டத்தில் பஞ்சத்தால் விவசாயம் பொய்த்தது.
- அரசு வரி செலுத்த அறிவுறுத்தியதால் உள்ளூர் விவசாயிகள் காந்தியடிகள் தலைமையில் வரிகொடா இயக்கம் தொடங்கினர்.

## VII. விரிவான விடையளி.


**1. விவசாயிகளின் புரட்சிகள் ஏற்பட காரணங்களை விவரி?**

- ஆங்கில ஆட்சி இந்திய வேளாண்மையில் பல மாற்றங்களை கொண்டு வந்தது.
- ஜமீன்தார்கள் நில உரிமையாளர்களாக மாறினர்.
- விவசாயிகளின் உழைப்பு சுரண்டப்பட்டு, அவர்கள் வாழ்க்கை துயரமானது.
- எனவே 19,20ம் நூற்றாண்டுகளில் ஜமீன்தார்களையும் ஆங்கிலேயர்களையும் எதிர்த்து புரட்சியில் ஈடுபட்டனர்.

**2. பஞ்சாப் விவசாயிகள் இயக்கம் பற்றி விவரி?**

- நகர்ப்புற வட்டிக்காரர்களிடமிருந்து பெற்ற கடனை திரும்ப செலுத்த இயலவில்லை.
- வட்டிக்கடைக்காரர்களின் ஒடுக்கு முறையை தடுக்க புரட்சியில் ஈடுபட்டனர்.
- ஆங்கில அரசு புரட்சியை விரும்பவில்லை. ஏனென்றால் இராணுவ வீரர்கள் அப்பகுதியில் தேர்வு செய்யப்பட்டனர்.
- 1900ல் பஞ்சாப் நில உரிமை மாற்று சட்டம் நிறைவேற்றப்பட்டு மற்ற பகுதிகளிலும் செயல்படுத்தப்பட்டது.
- இச்சட்டப்படி மக்கள் விவசாயிகள், வட்டிக்கடைக்காரர்கள், இதர மக்கள் என பிரிக்கப்பட்டனர்.

## VIII. மனவரைபடம்




www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# அரசு பொதுத் தேர்வு - 2022

## சமூக அறிவியல்

காலம் : 2.30 மணி மதிப்பெண் : 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும். 10×1=10**

1. இந்தியாவில் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார்?
அ) வாஸ்கோடகாமா ஆ) பார்த்தலோமியோ டயஸ்
இ) அல்போன்சோ-டி-அல்புகர்க் ஈ) அல்மெய்டா
2. மூன்றாம் ஆங்கிலேய-மைசூர் போரின் போது ஆங்கிலேய தலைமை ஆளுநர்
அ) இராபர்ட் கிளைவ் ஆ) வாரன் ஹேஸ்டிங்ஸ்
இ) காரன்வாலிஸ் ஈ) வெல்லெஸ்லி
3. மகல்வாரி முறையில் மகல் என்றால் என்ன?
அ) வீடு ஆ) நிலம் இ) கிரமம் ஈ) அரண்மனை
4. உலக மண் நாளாக கடைப்பிடிக்கப்படும் நாள்
அ) ஆகஸ்டு 15 ஆ) ஜனவரி 12 இ) அக்டோபர் 15 ஈ) டிசம்பர் 5
5. ................ என்ற கருவி ஈரப்பதத்தை அளக்கப் பயன்படுகிறது.
அ) காற்றுமானி ஆ) அழுத்தமானி இ) ஈரநிலை மானி ஈ) வெப்பமானி
6. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் நகரமயமாக்கலுக்கு முக்கிய காரணம்
அ) மிகையான உணவு தானிய உற்பத்தி ஆ) கால்நடை வளர்ப்பு
இ) மீன் பிடித்தல் ஈ) வேட்டையாடுதல்
7. இந்தியாவின் முதல் குடிமகன் யார்?
அ) ஆளுநர் ஆ) முதலமைச்சர் இ) சபாநாயகர் ஈ) உள்துறை அமைச்சர்
8. இந்தியாவின் முதல் குடிமகன் யார்?
அ) பிரதமர் ஆ) குடியரசுத் தலைவர் இ) முதலமைச்சர் ஈ) இந்திய தலைமை நீதிபதி
9. பின்வருவனவற்றில் கருப்புப் பணம் குவிப்பதற்கு காரணமானவர்கள்
அ) வரி ஏய்ப்பவர்கள் ஆ) பதுக்குபவர்கள் இ) கடத்தல் காரர்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும்
10. பொதுத்துறை ................... உடையது.
அ) இலாப நோக்கம் ஆ) சேவை நோக்கம் இ) ஊக நோக்கம் ஈ) இவற்றில் ஏதுவுமில்லை

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக. 5×1=5**

1. .................... சிவகங்கையின் சிங்கம் என அழைக்கப்படுகிறது.
2. நிலச்சரிவு ................. இடருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.
3. புவிக்கோள மாதிரி என்பது .............. இன் உண்மையான உருவ மாதிரியாக்கமாகும்.
4. மனித உரிமைகள் என்பது ............. உரிமைகள்
5. மின்னணு வங்கியை ............ என்றும் அழைக்கலாம்.

**III. பொருத்துக. 10×1=10**

| | | |
|---|---|---|
| 1. டேனியர்கள் | - | சுனாமி |
| 2. இரண்டாம் சரபோஜி | - | 1098 |
| 3. மதுரை | - | வரி ஏமாற்றுபவர்கள் |
| 4. குடிபெயர்தல் | - | 1616 |
| 5. நில அதிர்வு | - | பண்டைய நகரம் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



6. நீர் சுருங்குதல் - வரிக்கோட்டுப்பாதை
7. குழந்தை உதவி மைய எண் - முதன்மைத்துறை
8. பாதசாரி - மேகங்கள்
9. கருப்புப் பணம் - வெளியேறுதல்
10. வேளாண்மை - சரஸ்வதி மஹால்

## IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக. 5×1=5

1. நாணயங்கள் பயன்பாட்டு பொருள் ஆதாரங்களுள் ஒன்று ஆகும்.
2. காரன்வாலிஸ் பிரபு காவல் துறையை உருவாக்கினார்.
3. இரயத்துவாரி முறை தாமஸ் மன்றோவால் அறிமுகப்படுத்தப்பட்டது.
4. புனித வில்லியம் கோட்டை சென்னையில் அமைந்துள்ளது.
5. ரிக் வேத காலத்தில் பெண்கள் கௌரவிக்கப்பட்டனர்.

## V. காரணம் கூறுக. 5×2=10

1. தீப்பாறைகள் எரிமலை பகுதிகளில் காணப்படுகிறது.
2. மலை ஏறுபவர்கள் உயர்ந்த சிகரங்களுக்குச் செல்லும்போது ஆக்ஸிஜன் சிலிண்டர்களை எடுத்துச் செல்கின்றனர்.
3. நீர் புகாத இடங்களில் நீரின் ஊடுருவல் குறைவாக உள்ளது.
4. துருவப்பகுதிகளிலும் மலைப்பகுதிகளிலும் பனிப்பொழிவு பொதுவான நிகழ்வாக உள்ளது.
5. புவியில் நன்னீர் குறைவாக உள்ளது.

## VI. வேறுபடுத்துக. 5×2=10

1. உருமாறிய பாறைகள் மற்றும் படிவுப்பாறைகள்
2. கோள் காற்றும் மற்றும் பருவகாலக் காற்றுகள்
3. இயற்கை மற்றும் செயற்கை இடர்கள்
4. நில அதிர்வு மற்றும் சுனாமி
5. புவிக்கோள மாதிரி மற்றும் புவிப்படம்.

## VII. சரியான கூற்றை கண்டுபிடி. 2×2=4

1. கூற்று : இந்திய கைவினைஞர்கள் பிரிட்டிஷாரின் காலனி ஆதிக்கத்தில் நலிவுற்றனர்.
   காரணம் : பிரிட்டிஷார் இந்தியாவை தனது மூலப்பொருள் தயாரிப்பாளராகவும் முடிவுற்ற பொருள்களுக்கான சந்தையாகவும் கருதினர்.
   அ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான விளக்கம்
   ஆ) கூற்று சரி ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை
   இ) கூற்றும் காரணமும் சரி
   ஈ) கூற்றும் காரணமும் தவறானவை

2. கூற்று : ஆங்கிலேயர்கள் தங்கள் மாற்று தலைநகரங்களை மலைப்பாங்கான பகுதிகளில் அமைத்தனர்.
   காரணம் : அவர்கள் இந்தியாவில் கோடைகாலத்தில் வாழ்வது கடினம் என உணர்ந்தனர்
   அ) கூற்று சரி மற்றும் காரணம் தவறு
   ஆ) கூற்று தவறு மற்றும் காரணம் சரி
   இ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது
   ஈ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## VIII. சுருக்கமான விடையளி. (அனைத்தும்) 8×2=16

1. இந்தியாவில் டச்சுக்காரர்களால் நிறுவப்பட்ட முக்கிய வர்த்தக மையங்களின் பெயரை எழுதுக.
2. இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட முக்கியமான பெண்களைக் குறிப்பிடுக.
3. மண்ணின் வகைகளைக் கூறுக.
4. இடரின் முக்கிய வகைகள் யாவை?
5. மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளின் பெயரை எழுதுக.
6. நீதித்துறை அமைப்பு நமக்கு ஏன் தேவைப்படுகிறது?
7. சேமிப்பு மற்றும் முதலீடு என்றால் என்ன?
8. பொதுத்துறைகளின் மூன்று உறுப்புகள் யாவை?

## IX. விரிவான விடை தருக. (ஏதேனும் நான்கு மட்டும்) 5×4=20

1. நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.
2. நிலையான நிலவரி திட்டத்தின் நிறைகுறைகளை விவாதிக்க.
3. மண்ணடுக்குகள் பற்றி விவரிக்கவும்.
4. நீர் மாசுபட்டால் ஏற்படும் விளைவுகள் குறித்து விரிவாக விவாதிக்க.
5. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.
6. பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள் யாவை?

## X. உலக வரைபடத்தில் குறிக்கவும். 5×1=5

பசுபிக் பெருங்கடல், ஆசியா, இந்தியப் பெருங்கடல், தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா

## XI. இந்திய வரைபடத்தில் குறிக்கவும். 5×1=5

டெல்லி, பாரக்பூர், வந்தவாசி, கொச்சி, சூரத்

-o0o-

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com